# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் 10 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்!

## 30 புதிய சிப்காட் தொழில் வளாகங்கள்! மதுரை, திருச்சி, பட்டாபிராமில் டைடல் பூங்காக்கள்!

## சேலம், தஞ்சை, விழுப்புரம், தூத்துக்குடி உள்ளிட்ட பல நகரங்களில் புதிய நியோ டைடல் பூங்காக்கள்!

# தகவல் தொழில்நுட்பத் தொழில்களை வளர்ப்பதிலும் - ஏற்றுமதிகளைப் பெருக்குவதிலும் தமிழ்நாட்டிற்கு முதலிடம்!

# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் எல்லாவற்றிலும் தமிழ்நாடு முதல் மாநிலம்!

சென்னை, ஏப். 4 -

**தமிழ்நாட்டில் எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் மோடி, அமித்ஷா உள்ளிட்ட தலைவர்களும் தமிழ்நாட்டை வலுப்படுத்துவோம் முன்னேற்றுவோம் வளப்படுத்துவோம் என்றெல்லாம் சொல்லி தேர்தல் நேரத்தில் மக்களிடம் ஆசை வார்த்தைகள் கூறி ஏமாற்றி வருகின்றனர். அவர்கள் வாய் ஜாலம் காட்டுபவர்களே தவிர வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாத மகா சாமர்த்தியசாலிகள். அவர்களின் பொய் முகங்ககளை அடையாளம் காட்டும் வகையில் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு படைத்துள்ள சாதனைகளை எடுத்துரைப்பதன் மூலம் தமிழ்நாடு மக்களிடம் உண்மையை தெளிவுபடுத்துகிறோம்.**



2021இல் திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் இளைஞர்கள், மகளிர் ஆகியோரின் வேலைவாய்ப்புகளை அதிகம் உருவாக்கும் நோக்கிலும் பல்வேறு புதுமையான முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

**தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தொழில் முகவர் மாநாடுகள்**

தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பல்வேறு சலுகைகளை வழங்கி தொழில் தொடங்கிட ஊக்கமளிக்கத் தொடங்கினார்கள். தமிழ்நாட்டில் சென்னை, கோவை, தூத்துக்குடி, மதுரை, கிருஷ்ணகிரி முதலிய பல்வேறு இடங்களில் முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தினார்கள்.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் குறிப்பாக சிங்கப்பூர், மலேசியா, அரபு நாடுகள், ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்பெயின் முதலிய நாடுகளுக்கும் சென்று முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தி, புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்குத் தேவையான நில வசதிகள், உட்பட அனைத்தையும் திராவிட மாடல் அரசு வழங்கும்; அத்துடன், அறிவும் ஆற்றலும் நிறைந்த கல்வி, தொழில்நுட்பத்தில் சிறந்த மனிதவளமும் தமிழ்நாட்டில் நிறைய உள்ளன என்பதை எடுத்துக் கூறி தொழில் தொடங்க வருமாறு அழைப்பு விடுத்தார்கள். அவற்றின் பயனாக, கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளின் தொழில் முகவர்களுடன் 1176 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 12.16 இலட்சம் கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடுகளுடன் புதிய தொழில்கள் தொடங்குவதற்கான வாய்ப்புகள் பெருகியுள்ளனஇவற்றின் மூலம் தூத்துக்குடியில் ரூ.16,000 கோடி முதலீட்டில் முதற்கட்டமாக 4,000 கோடி ரூபாய் முதலீட்டில் 3,500 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வின்ஃபாஸ்ட் மின் வாகன தொழிற்சாலை, ரூ.1003 கோடியில் பிள்ளைப்பாக்கம் கண்ணாடிப் பொருள்கள் உற்பத்தி தொழிற்சாலை, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அருகே மகிமைபுரத்தில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில், ரூ.1,000 கோடி முதலீட்டில், 15,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் தைவான் நாட்டைச் சேர்ந்த டீன் ஷூஸ் (Dean Shoes) நிறுவனத்தின் புதிய காலணி உற்பத்தி தொழிற்சாலை, ரூ. 3250 கோடியில் மீண்டும் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஃபோர்டு தொழிற்சாலை உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. 36 இலட்சம் இளைஞர்களுக்கும், மகளிருக்கும் புதிய வேலை வாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

**புதிய தொழிற்கொள்கைகளும், நில வங்கியும்**

தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை 2021, தமிழ்நாடு குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் கொள்கை 2024 முதலிய 19 புதிய தொழிற்கொள்கைகள் வகுக்கப்பட்டு: தொழில் வளர்ச்சிக்குப் பல்வேறு வகையிலும் ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளன. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களில் கவனம் செலுத்தி 45,000 ஏக்கர் நில வங்கி உருவாக்கப்படும் என அறிவித்து; அந்த இலக்கை விஞ்சிடும் வகையில் சிப்காட் நிறுவனம் 54,015 ஏக்கர் நிலத்தை அடையாளம் கண்டு புதிய தொழில்களுக்கு நிலங்களை வழங்கியுள்ளது.

**5 ஆண்டுகளில் 30 புதிய சிப்காட் தொழில் வளாகங்கள்**

திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2021 இல் ஆட்சிப்பொறுப்பேற்றபின் கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் 12,198 ஏக்கர் பரப்பளவில் 30 புதிய சிப்காட் தொழில் வளாகங்களை உருவாக்கியுள்ளார்கள்.

**புதிய டைடல் பூங்காக்கள்**

தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருக்குவதில் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தகவல் தொழில்நுட்பத் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் படித்த இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளுக்கு வழி வகுக்க முடியும் எனும் உயரிய நோக்கத்துடன் திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டில் புதிய டைடல் பூங்காக்களை உருவாக்கி வருகிறது. பட்டாபிராம் டைடல் பூங்கா தரைத்தளம் மற்றும் 21 தளங்களுடன் 5.57 இலட்சம் சதுரஅடி கட்டுமானப் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது; மதுரை டைடல் பூங்கா 5.34 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் 13 தளங்களுடன் கட்டப்படுகிறது; திருச்சி டைடல் பூங்கா 5.58 இலட்ச சதுரஅடி கட்டுமானப் பரப்பளவில் 7 தளங்களுடன் அமைக்கப்படுகிறது.

**திராவிட மாடல் அரசின் புதிய நியோ டைடல் பூங்காக்கள்**

தகவல் தொழில்நுட்பத் தொழில் வாய்ப்புகளைப் பரவலாக அமைத்திட வேண்டும் என்னும் சீரிய நோக்கத்துடன் நியோ டைடல் பூங்காக்களை மாநிலம் முழுவதும் ஏற்படுத்தி வருகிறது. இதன்படி சேலம், தஞ்சாவூர், விழுப்புரம், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் புதிய நியோ டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. அத்துடன், திருப்பூர், காரைக்குடி, இராசிபுரம், திருவண்ணாமலை, வேலூர் ஆகிய மாவட்டங்களிலும் நியோ டைடல் பூங்காக்கள் தொடர்ந்து திறக்க ப்பட்டு வருகின்றன.

**10 புதிய சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்**

10 புதிய தொழில் தொடங்குவதற்காக முன் வரும் தொழில் முகவர்களுக்கு பல்வேறு சலுகைகளையும் வழங்கி வரும் திராவிட மாடல் அரசு வரிச்சலுகை முதலியவற்றை வழங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில்களை ஊக்கப்படுத்திடும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களையும் தமிழ்நாடு நிறுவியுள்ளது.

**பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களுடன் ஒப்பீடில் தமிழ்நாடு முதலிடம்:**

திராவிட மாடல் அரசு அமைவதற்கு முன் தமிழ்நாட்டில் 48 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மட்டுமே இருந்தன. 2021க்கு பின் 10 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்பட்டு, தற்பொழுது மொத்தம் 58 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன.

இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் தொழில்களைப் புதிதாகத் தொடங்குவதற்கும், உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதிகள் செய்வதற்கும் வரிச் சலுகைகள் உட்பட பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது திராவிட மாடல் அரசு.

இவற்றின் காரணமாக தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை வெளிநாடுகளுக்கு, ஏற்றுமதி செய்வதில் தமிழ்நாடு இந்தியாவில் முதல் இடம் பெற்றுள்ளது. இதே நேரத்தில் பி.ஜே.பி ஆட்சி செய்கின்ற குஜராத் மாநிலத்தில் 2020இல் செயல்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் எண்ணிக்கை 20 மட்டுமே; தற்போது 27 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அங்கு உள்ளன. அதே போல மகாராட்டிர மாநிலத்தில் 2020இல் 37 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் தற்போது 41 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் உள்ளன. உத்திரபிரதேச மாநிலத்தில் 2020இல் 14 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும், தற்போது 23 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் உள்ளன. மத்திய பிரதேசத்தில் 2020இல் 5 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும், தற்போது 8 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் அமைந்துள்ளன. ஏறத்தாழ இதே நிலை தான் ஏனைய மாநிலங்களிலும் உள்ளன இவை எல்லாவற்றையும் விட, தமிழ்நாடு மிக அதிக எண்ணிக்கையில் 2020–இல் 48 சிறப்புப் பொருளாதார மண்டலங்களைக் கொண்டிருந்தது, திராவிட நாயகர் திரு.மு.க..ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளால் 5 ஆண்டுகளில் 10 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் புதிதாக அமைக்கப்பட்டு மொத்தம் 58 சிறப்புப் பொருளாதார மண்டலங்ககளையும் கொண்டு தமிழ்நாடு இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் முன்னணி மாநிலமாகவே திகழ்கிறது. அடுத்த 3 ஆண்டுகளில் மேலும் 7 புதிய சிறப்புப் பொருளாதார மண்டலங்களும், ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்காவும் அமைக்கப்பட உள்ளன.




மைக்ரான், ரிலையன்ஸ், இன்ஃபோசிஸ் மற்றும் எல்&டி போன்ற நிறுவனங்களும் புதிய சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளன.

**வரிச் சலுகை மற்றும் சீர்திருத்தம்:**

திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் பேரவையில் வழங்கிய 2026–2027 நிதிநிலை அறிக்கையில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான வரிகளைக் குறைத்து, உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் தற்போதுள்ள உபரித் திறனை உள்நாட்டுச் சந்தைக்குப் பயன்படுத்தி, இறக்குமதியைக் குறைக்கும் நடவடிக்கைகளுக்கும் திராவிட மாடல் அரசு ஊக்கம் அளித்திட திட்டமிட்டுள்ளது.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மூலம் நேரடி வேலைவாய்ப்பை உருவாக்கி, ஏற்றுமதி மூலம் மேலும் மேலும் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பதிலும் திராவிட மாடல் ஆட்சியின் தமிழ்நாடே உறுதி பூண்டுள்ளது பெருமைக்குரியதாகும்.

இப்படி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியில் முனைப்பான கவனம் செலுத்தி தொடர்ந்து பல தொழிற்சாலைகளை பல்வேறு அமைப்புகள் மூலம் நிறுவி வருவதால் தமிழ்நாடு பல முனைகளிலும் முன்னேற்றம் கண்டுவருகிறது. ஒன்றிய அரசின் அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் 5.8.2025 அன்று வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி பொருளாதார வளர்ச்சியில் 11.19 இரண்டு இலக்க வளர்ச்சி கண்டு இந்திய மாநிலங்களிலேயே தமிழ்நாடு முதலிடம் என்னும் சாதனையை நிகழ்த்தியுள்ளது. இது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஓய்வில்லா உழைப்பிற்குக் கிடைத்த மகத்தான வெற்றியென்றே அனைவரும் பாராட்டுகின்றனர்.


---

## கடலூர் மாவட்டத்திலுள்ள 9 சட்டமன்றத் தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்து, ஆதரித்து

# முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பொதுக்கூட்டத்தில் சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர்,ஏப்.4-



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வருகின்ற (07.04.2026 செவ்வாய்க் கிழமை) காலை 08.00 மணியளவில், கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் கடலூர் மாவட்டத்திலுள்ள காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, புவனகிரி, சிதம்பரம், கடலூர், திட்டக்குடி, விருதாச்சலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய ஒன்பது சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் வெற்றி வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்து, அவர்களை ஆதரித்து நடைபெறும் சட்டமன்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்ற உள்ளார்.

அதுசமயம் இக்கூட்டத்தில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக தொகுதி பார்வையாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, பூத் கழக இளைஞரணி மற்றும் மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள்(BDA), ஸ்டாலினின் மகளிர் படையினர்கள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
**செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க**

---

## தென்காசி வடக்கு – வாசுதேவநல்லூர்

# தொகுதி வேட்பாளர் ஈ.ராஜா அறிமுகக் கூட்டம்!

### சதன் திருமலைகுமார் தலைமையில் – அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் சிறப்புரை!

தென்காசி .ஏப்.4 -

தென்காசி வடக்கு மாவட்டம் வாசுதேவ நல்லூர் தொகுதி கழக வேட்பாளர் ஈ.ராஜா அறிமுகக் கூட்டத்தில் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் சிறப்புரையாற்றினார்.

தென்காசி வடக்கு மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி சார்பில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளரும் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளருமான ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிமுகம் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம் சிவகிரி மறவர் சமுதாய மண்டபத்தில் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலை குமார் தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார் வாசுதேவநல்லூர் தொகுதி பார்வையாளர் செண்பக விநாயகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் பங்கேற்று பேசியதாவது.

தென்காசி மாவட்டத்தில் 5 சட்டமன்ற தொகுதிகளிலும் தி.மு.க மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.மகளிர் திட்டம் ரூபாய் 8000 கூப்பன் வழங்கப்படும் என்ற தி.மு.க.வின் அறிக்கை பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

தி.மு.க.மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளருக்கு வாக்களித்து சாதி, மத பாகுபாடற்ற திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 2.0 ஆட்சியை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் பேசினார்.

நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் சுப்பையா,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, சீனிவாசன், பரமகுரு, மாவட்ட பொருளாளர் சரவணன் துணைச் செயலாளர் மனோகரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமி பாண்டியன்,தேவதாஸ்,சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் பொன் முத்தையா பாண்டியன், வெள்ளத்துரை, அன்புக்கரசு,கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் செல்வராஜ், சுதா பாலசுப்பிரமணியம், சோலை கனகராஜ், உச்சி மாகாளி, இசக்கிதுரை,

செய்யது பட்டாணி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் பிச்சையா, கிப்ட்சன், உதயகுமார், டாக்டர் மணிகண்டன்,நகர செயலாளர்கள் அந்தோணி சாமி, நாகூர் கனி,பேரூர் செயலாளர்கள் கேடிசி குருசாமி,ரூபி பாலசுப்ரமணியம்,நல்லசிவன்,சேது சுப்பிர மணியன் முன்னாள் மாவட்ட செயலாளர் மூர்த்தி பாண்டியன் உட்பட கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.